தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள்
ஒ.மு.எண். 329/ஆ5/2021, நாள் 05.02.2021

•••

பொருள். மெட்ரிகுலேசன் பள்ளிகள் – மதுரை மாவட்டம், பொன்மேனி, டால்பின் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி – பள்ளி அமைவிடத்தில் கூடுதலாக உள்ள நிலப்பரப்பினை வேறு கல்வி பயன்பாட்டிற்கு பயன்படுத்த அனுமதி கோரியது – தொடர்பாக.

பார்வை. 1. அரசாணை (2டி) எண். 48 பள்ளிக் கல்வி (எக்ஸ்2) துறை, நாள் 21.07.2004

2. அரசாணை (2டி) எண். 24 பள்ளிக் கல்வி (எக்ஸ்2) துறை நாள் 23.04.2010

3. மதுரை மாவட்டம், பொன்மேனி, டால்பின் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளித் தாளாளர் கடிதம் நாள் 14.02.2020

4. மதுரை, முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண். 5160/அ3/2021, நாள்.18.01.2021

•••

மதுரை மாவட்டம், பொன்மேனி, டால்பின் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி, மதுரை மாநகராட்சிப் பகுதியில் அமைந்துள்ளதாகவும், மதுரை , பொன்மேனி , ச.எண்கள் 140.2பி, 147/8பி, மற்றும் 106/2பி ஆகியவற்றில் 01 ஏக்கர் 90 செண்ட் இடம் உள்ளதாகவும், மேற்படி சர்வே .எண்களில் பொன்மேனி, டால்பின் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிக்கு 0.35 செண்ட் நிலம் குத்தகைக்கு பெறப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு ஆவணங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. மொத்தம் உள்ள இடத்தில் மெட்ரிகுலேசன் பள்ளிக்கு குத்ததைக்கு அளிக்கப்பட்டது போக மீதம் உள்ள 01 ஏக்கர் 09 செண்ட் நிலத்தினை சி.பி.எஸ்.சி பள்ளி துவங்க பயன்படுத்துவதற்கு அனுமதி கோரி பள்ளித் தாளரால் பார்வை–3 இல் உள்ளவாறு கருத்துருக்கள் அளிக்கப்பட்டு, பார்வை–4இல் உள்ள முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதத்தின் மூலம் பரிந்துரைக்கப்பட்டு இவ்வியக்ககத்தில் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட கருத்துருக்கள் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

மதுரை மாவட்டம், பொன்மேனி, டால்பின் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி, எல்.கே.ஜி முதல் 12 வகுப்புகளுக்கு 31.05.2018 வரை தொடர் அங்கீகாரம் வழங்கப்பட்டு செயல்பட்டுவருகிறது. இப்பள்ளி டால்பின் கல்வி அறக்கட்டளையால் நிர்வகிக்கப்பட்டுவருகிறது. இப்பள்ளிக்கு 01 ஏக்கர் 09 செண்ட் நிலம் குத்தகைக்கு அளிக்கப்பட்டு குத்தகை ஆவண நகல் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பொருளில், பார்வை–1 மற்றம் 2 இல் உள்ள அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு, மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிக்கு குறைந்தபட்ட நிலத்தேவை ஒரே இடமாக இருக்கவேண்டும் மற்றும் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிக்கு தனியாக சுற்றுச் சுவர் மற்றும் நுழைவுவாயில் அமைக்க வேண்டும் என்ற நிபந்தனையின்பேரில், கூடுதலாக உள்ள நிலப்பரப்பினை வேறு கல்வி பயன்பாட்டிற்கு பயன்படுத்துவது சார்ந்து பள்ளியை நிர்வகிக்கும் அறக்கட்டளை நிர்வாகமே முடிவு செய்துகொள்ளலாம் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர்

பெறுநர்
தாளாளர், டால்பின்மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி, பொன்மேனி மதுரை மாவட்டம்
நகல். முதன்மைக் கல்வி அலுவலர், மதுரை